புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜுலை 27, 2023 • புரட்சி 23 • முழக்கம் 28 • விலை ரூ.3.00

## சனாதனம் தோலுரிப்பு : திராவிட மாடல் சாதனை விளக்கம்

# தெருமுனைக் கூட்டங்களுக்கு பேராதரவு!

எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டங்கள் சென்னை மாவட்டக் கழகம் சார்பாக இரண்டாவது வாரமாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அது பின்வருமாறு :-

ஜுலை 15-ஆம் தேதியன்று ராயப்பேட்டை இலாயிட்ஸ் காலனி மற்றும் வி.எம். தெருவிலும், ஜுலை 17-ஆம் தேதியன்று இராயபேட்டை பகுதிகளில் உள்ள கொலைகாரப்பேட்டை மற்றும் ராயப்பேட்டை பெருமாள் கோயில் வீதியிலும், ஜுலை 18-ஆம் தேதியன்று ஐஸ் ஹவுஸ் NKT பள்ளி அருகில் மற்றும் திருவல்லிக்கேணி பி.வி.நாயக்கன் சாலையிலும், ஜுலை 19-ஆம் தேதியன்று ஐஸ் ஹவுஸ் இஸ்ஸபா தெரு மற்றும் ஷேக் தாவூத் தெருவிலும் ஜூலை 20-ஆம் தேதியன்று மீசார்பேட்டை மார்கெட் மற்றும் ஜாம் பஜார் சிட்டிபாபு சாலையிலும், ஜுலை 21-ஆம் தேதியன்று திருவல்லிக்கேணி மாணிக்கவாசகம் தெரு மற்றும் தேவராஜ் தெருவிலும் ஜுலை 22-ஆம் தேதியன்று ஆயிரம் விளக்கு மாடர்ன் பள்ளி அருகில் மற்றும் அப்பல்லோ மருத்துவமனை அருகிலுள்ள மக்கிஸ் கார்டனிலும் நடைபெற்றது.

நாத்திகன் - உமாபதி குழுவின் அரசியல் நய்யாண்டி நிகழ்ச்சியுடன் ஒவ்வொரு கூட்டமும் தொடங்கியது. பாடகர் ஜெய்பீம் அறிவுமானனின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த கூட்டங்களில் தலைமை நிலையச் செயலாளர் தபசி.குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி,அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத் தலைவர் வ.அரங்கநாதன், விசிக பகுதிப் பொறுப்பாளர் விடுதலைச் செழியன், சேத்துப்பட்டு இராசேந்திரன், எட்வின் பிரபாகரன், ஜெயபிரகாசு, அன்னூர் விஷ்ணு, திருப்பூர் பிரசாந்த், தேன்மொழி ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

கூட்டத்தின் இடையே கழகத் தோழர்கள் கடைவீதி வசூல் மேற்கொண்ட பொதுமக்கள் தங்களது ஆதரவை தெரிவித்து தாராளமாக நன்கொடையளித்தனர். இதில் மொத்தம் 20,700/- நன்கொடை திரட்டப்பட்டது.

நாளுக்கு நாள் கூட்டத்திற்கு பெருகும் மக்கள் ஆதரவை கண் கூடாக பார்க்க முடிகிறது, நேரில் வந்து வாழ்த்திச் செல்கிறார்கள், தாராளமாக நிதியுதவி வழங்குகிறார்கள், இது தோழர்களுக்கு புதிய உத்வேகத்தை தருகிறது. 200 தெருமுனைக் கூட்டங்களை அறிவித்து, இதுவரை 24 கூட்டங்களை சென்னை மாவட்டக் கழகம் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**சேலம் :** கொளத்தூர் ஒன்றியம், காவலாண்டியூர் கிளைக் கழக சார்பில் ஜுலை 22-23 ஆகிய தேதிகளில் கண்ணாமூச்சி உப்பு கல்லூர் மற்றும் நெடுஞ்செழியன் நகரில் எது சனாதனம் ? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.

சென்னப்பன் வரவேற்புரையாற்ற தொடங்கியது. கண்ணையன், மாரி தலைமை தாங்க சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூரியகுமார், கண்ணாமூச்சி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சேகர், கே.எஸ்.சண்முகம் முன்னிலை வகித்தனர்.

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு பகுத்தறிவு பாடல்களை பாடினார், காவை இளவரசனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சியை தொடர்ந்து தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈசுவரன், சித்துசாமி, தமிழ்நாடு மாணவர் கழக திருப்பூர் மகிழவன், மேட்டூர் சுகந்தன், சேட்டுகுமார் கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் வி.சி.க. ஆகியோர் சிறப்புரையாற்றினர். அபிமன்யு நன்றி கூறினார்.

பொன்னுசாமி, கொளத்தூர் விஜி, காவை சசிகுமார், இளவரசன், சந்திரன், பச்சியப்பன், தங்கராசு, கொளத்தூர் பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கண்ணாமூச்சி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சேகர் ஏற்பாடு செய்தார்.

நங்கவள்ளி கிளைக் கழகத்தின் சார்பில் 23.07.2023 ஞாயிறு அன்று முதல் கூட்டம் இருப்பாளி பேருந்து நிறுத்தத்திலும், 2-வது கூட்டம் சித்தூர் பேருந்து நிறுத்தத்திலும், 3-வது கூட்டம் பூலாம்பட்டி பேருந்து நிலையத்திலும் நடைபெற்றது.

நங்கவள்ளி ஒன்றியச் செயலாளர் பொ.கிருஷ்ணன் தலைமை வகித்தார், சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராசு, கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை, மேட்டூர் நகர செயலாளர் குமரப்பா, நங்கவள்ளி நகர செயலாளர் பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து ஆத்தூர் மகேந்திரன் அவர்களின் மந்திரமா? தந்திரமா? நிகழ்வு நடைபெற்றது.

வனவாசி நகர செயலாளர் பழ.உமாசங்கர், இளம்பிள்ளை திவ்யா, சுகந்தன் பிரபாகரன், திருப்பூர் மகிழவன், திராவிட தமிழர் கட்சி மாநில அமைப்பு செயலாளர் செல்வ முருகேசன், தமிழ் புலிகள் கட்சி மாவட்ட செயலாளர் ராமலிங்கம், ஆம் ஆத்மி கட்சி எடப்பாடி சட்டமன்ற தொகுதி தலைவர் மா.குமரேசன், திராவிட தமிழர் எழுச்சி கழகம் தமிழ்மணி, திராவிட தமிழர் கட்சி மாவட்ட செயலாளர், ராமச்சந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இளம்பிள்ளை கோபி அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். எடப்பாடி குமார் நன்றியுரை கூறினார். கடை வசூல் மூலம் ரூ.1530/- சித்தூரில் திரட்டப்பட்டது.

நங்கவள்ளி அருள்குமார், தோழர் சந்திரசேகரன், RS பகுதி தோழர் நாகராஜ், இளம்பிள்ளை பகுதி தோழர் சேகர், இருப்பாளி பகுதி முரளி, ஜலகண்டபுரம் கோபால், மேட்டூர் பகுதி தோழர் முத்துராஜ், தங்கமாபுரிபட்டினம் ராமச்சந்திரன், வெள்ளார் சிவா ஆகியோர் கலந்துகொண்டனர்.

7-வது மற்றும் 8-வது தெருமுனை கூட்டம் நேற்று ஜுலை 24,மாலை 4 மணிக்கு பால் பண்ணை அருகிலுள்ள சித்தனூரிலும், அடுத்தக் கூட்டம் மாலை 6 மணிக்கு கொல்லப்பட்டி பேருந்து நிறுத்தத்திலும் நடைபெற்றது. தங்கதுரை தலைமைத்தாங்கினார், மணிமாறன் முன்னிலை வகித்தார். முருங்கபட்டி ரமேசு வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து இளம்பிள்ளை மோகன்ராஜ், தமிழ்நாடு மாணவர் கழகம் செல்வா ஆகியோர் உரையாற்றினர். அசோக் நன்றி கூறினார்.

சேகர்,கோபி,திவ்யா,முத்துமாணிக்கம்,தனபதி,மேச்சேரி தமிழரசன், ஆர்.எஸ் பகுதி நாகராஜ், நங்கவள்ளி கிருஷ்ணன், அருள், பிரபாகரன், உமாசங்கர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்டக் கழகம் சார்பாக 50 தெருமுனை கூட்டங்கள் நடத்துவது என திட்டமிடப்பட்டு அதன் தொடக்க கூட்டம் கல்வி வள்ளல் காமராசர் பிறந்தநாளான ஜுலை 15-ஆம் தேதியன்று அனுப்பர்பாளையத்தில் நடைபெற்றது. முன்னதாக கல்வி வள்ளல் காமராசர் அவர்களின் சிலைக்கு கனல்மதி, மகிழவன் ஆகியோரின் கொள்கை முழுக்கங்களோடு கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முதல் கூட்டம் காலை 10.30 மணிக்கு அனுப்பர்பாளையத்தில் தொடங்கியது. திமுக 15 வேலம்பாளையம் பகுதிச் செயலாளர் கோ. ராமதாஸ், திமுக 10வது வார்டு மாமன்ற உறுப்பினர் பிரேமலதா கோட்டா பாலு, சிபிஐ 14வது வார்டு உறுப்பினர் செல்வராஜ், 10 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திமுக அனுசியா தேவி என். சண்முகசுந்தரம், சிபிஎம் நகர செயலாளர் நந்தகோபால் மாவட்டத் தலைவர் முகில் இராசு, மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, தெற்குபகுதி செயலாளர் இராமசாமி, மாநகர தலைவர் வீ.தனபால், மாநகரச் செயலாளர் சி.மாதவன், மாநகர அமைப்பாளர் முத்து, 15 வேலம்பாளையம் பகுதி செயலாளர் க.மாரிமுத்து திவிக, மகிழவன், இந்திய மாணவர் சங்கம் மணிகண்டன் ஆகியோர் உரையாற்றினார்கள். சரசுவதி நன்றி கூறினார்.

பல்லடம் நகர அமைப்பாளர் கோவிந்தராசு, அய்யப்பன், பல்லடம் பழனிச்சாமி, அனைமேடு டேவிட், அம்மாபாளையம் மோகன், அம்மாபாளையம் கணேசு, காளியம்மாள், முத்துலட்சுமி, சிரிஜா, கௌசல்யா, சங்கவி, ரூபா, பெரியார் விழுது பிரபன்யா, ஆதன், அனலிகா, இயல், ஆழியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலை 12.30 மணிக்கு அம்மாபாளையம் பகுதியிலும் , மாலை 4 மணிக்கு பெரியார் சிலை அருகிலும் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி கருத்துரையாற்றினார், மதன், சிரிஜா நன்றி கூறினார்கள். அனுப்பர்பாளையம் இரமேசு, பாபு ஆகியோர் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். கணேசு தேனீர் ஏற்பாடு செய்தார்.

**திருச்சி :** திருச்சி மாவட்டக் கழகத்தின் சார்பில் தெருமுனை கூட்டமானது 22.07.2023 சனி, காலை 10 மணிக்கு மரக்கடை இராமகிருஷ்ணா மேம்பாலம் அருகிலும், அதனை தொடர்ந்து மதியம் 12 மணிக்கு திருச்சி இரயிலடி, காதி கிராப்ட் அருகிலும் நடைபெற்றது.

திருவரங்கம் நகர செயலாளர் அசோக், விராலிமலை ஒன்றியப் பொறுப்பாளர் குமரேசன் ஆகியோர் தலைமை வகித்தனர், திருவெரும்பூர் ஒன்றிய செயலாளர் மணிகண்டன், திருப்பூர் காட்டன் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவெரும்பூர் ஒன்றிய பொறுப்பாளர் குணாராஜ் தொடக்கவுரையாற்றினார், மாவட்ட கழக அமைப்பாளர் புதியவன், பெரம்பலூர் மாவட்ட கழக தலைவர் தாமோதரன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொருப்பாளர்கள் விடுதலை, வழக்குரைஞர் சந்துரு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பெரியார் பெருந்தொண்டர் வன கோவிந்தசாமி, வி.சி.க பெரம்பலூர் நாடாளுமன்ற பொருப்பாளர் தமிழாதன், பெரம்பலூர் சுதாகர், சர்மிளா ஆகியோர் கலந்து கொண்டனர், மாவட்டச் செயலாளர் மனோகரன் நன்றி கூறினார்.

**ஈரோடு வடக்கு :** ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் எது சனாதனம்? எது திராவிடம்? இரண்டாம் நாள் தெருமுனைக் கூட்டம் நம்பியூர் பேருந்து நிலையம் பகுதியிலும், அடுத்த கூட்டம் கோபி ஒன்றியம் அளுக்குளி பகுதியிலும் இரமேசு தலைமையில் பெரியார் விழுது அறிவுக்கனல் பாடலுடன் துவங்கியது. வேலுச்சாமி, நாத்திக சோதி, சுப்பிரமணியம், கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் பரமேசுவரன், பு.இ.மு விசயசங்கர் ஆகியோர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி சிறப்புரையாற்றினார்கள்.

கா.சு.வேலுச்சாமி - தலைமைக் கழகப் பேச்சாளர், நாத்திக ஜோதி - மாவட்ட தலைவர், நிவாஸ், மாவட்ட அமைப்பாளர், எலத்தூர் செல்வகுமார் - மாவட்டச் செயலாளர், கோபி அருளானந்தம், சத்தி முத்து - தமிழ்நாடு அறிவியல் மன்றம், தமிழரசன், சித்தா பழனிச்சாமி, பவானி வினோத், கிருஷ்ணமூர்த்தி, அளுக்குளி தங்கம் திமுக, அலிங்கியம் செந்தில் குமார், கோபி ராவணன், சின்னதம்பி, சண்முகம், நம்பியூர் ரமேஷ், அசோக், ரகுநாதன், சுப்பிரமணியம், அறிவுமதி, அறிவரசன், கோசனம் மயில்சாமி பெரியார் விழுது யாழ் திலிபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்

## தலையங்கம்

# சமூகநீதிக்கு ஆதரவாக குரல்கொடுக்கும் கொலிஜியம்

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளாக என். செந்தில்குமார், ஜி.அருள் முருகன் என்ற இரண்டு வழக்கறிஞர்களை உச்சநீதிமன்ற கொலிஜியம் நியமித்துள்ளது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை உள்ளடக்கிய கொலிஜியம் எந்த அடிப்படையில் இவர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள் என்பதை ஒளிவு மறைவின்றி வெளிப்படைத்தன்மையோடு அறிவித்திருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும். வழக்கறிஞர் என்.செந்தில்குமார் பட்டியலினப் பிரிவை சார்ந்தவர், விளிம்பு நிலை சமூகத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும், கடந்த காலங்களில் அரசியல் சட்டம் மற்றும் கிரிமினல் சட்டங்கள் தொடர்பான வழக்குகளில் திறமையாக வாதாடியதற்கான சான்றுகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

அதேபோல் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் ஜி.அருள் முருகன் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர், இந்த சமுதாயத்திற்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்துடனும், சிவில், கிரிமினல் மற்றும் ரிட் மனுக்கள் மீதான வழக்குகளில் அனுபவம் மிக்கவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற கொலிஜியம் செய்த பரிந்துரையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் உச்சநீதிமன்றம் விளக்கம் அளித்துள்ளது. நீதித்துறையில் சமூகநீதி அடிப்படையில் பல்வேறு சமூகத்தினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அண்மைக்காலமாக நீதிபதிகள் பங்கேற்ற விழாக்களில் இதை வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக ஒய்.சந்திரசூட் பதவியேற்ற பிறகு பல்வேறு மாற்றங்களை செய்து வருகிறார். நீதிபதிகள் நியமனங்களில் இட ஒதுக்கீடுகள் சட்டப்படி இல்லை என்றாலும் அதற்கான நியாயத்தை மறுத்து விட முடியாது.

கடந்த 2018 ஆண்டு முதல் இன்று வரை மொத்தம் உள்ள 604 உயர்நீதிமன்ற நீதிபதிகளில் 458 பேர் [79 சதவீதம்] பார்ப்பனர்கள் மற்றும் உயர் ஜாதியினராக இருக்கிறார்கள், இவர்களின் சிலர் மனுதர்மத்தை நியாயப்படுத்தியும், குழந்தை திருமணங்களை நடத்துவதில் தவறில்லை என்றும், கீதையை தேசிய நூலாக்க வேண்டும் என்றும் சோதிடம் அறிவியல் என்றும் தங்கள் சொந்த கருத்துக்களை தீர்ப்புகளாக எழுதி வருகிறார்கள். உயர்நீதிமன்ற நீதிபதிகளில் பட்டியல் பிரிவைச் சார்ந்த நீதிபதிகள் 18 பேர் மட்டுமே, பழங்குடிப் பிரிவை சேர்ந்தவர்கள் 9 பேர், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் 34 பேர், பிற்படுத்தப்பட்டவர் 73 பேர், 13 நீதிபதிகள் குறித்து எந்த விவரமும் தெரியவில்லை. இது சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மக்களவையில் எழுத்து பூர்வமாக அளித்த பதில்.

குறிப்பாக பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு நீதித்துறையில் குறுக்கீடுகள் அதிகரித்து வருகின்றன, நேர்மையான நீதிபதிகள் பழிவாங்கப்படுவதும் தங்களுக்கு சாதகமாக செயல்படும் நீதிபதிகளுக்கு மாநிலங்களவை உறுப்பினர், ஆளுநர் பதவிகளை பரிசாக வழங்குவதும் வழக்கமாகிவிட்டது. பல முற்போக்கான தீர்ப்புகளை வழங்கிய தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் ஒரு கட்டத்தில் ஒரு நீதிமன்ற பெண் ஊழியரோடு அவரை தொடர்பு படுத்தி மிரட்டி பணிய வைக்கப்பட்டார். பதவி ஓய்வுக்கு முன் அயோத்தியில் ராமன் கோயில் இருந்ததற்கான சட்டபூர்வ வரலாற்றுச் சான்றுகளை கூறாமல் கோயிலை கட்டுவதற்கு அனுமதி வழங்கினார். அவருக்கு பதவி ஓய்வு கிடைத்தவுடன் மாநிலங்களவை உறுப்பினர் பதவி ஒன்றிய பாஜக ஆட்சியால் பரிசாக வழங்கப்பட்டது. குடியுரிமை திருத்த மசோதா கொண்டுவரப்பட்ட போது அதை எதிர்த்த இஸ்லாமியர்கள் டெல்லியில் இந்துத்துவ சக்திகளால் கடும் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த முரளிதரன் கொலிஜியம் பரிந்துரைத்த நிலையில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார். தமிழ்நாட்டில் அவர் செயல்படுவதை விரும்பாத ஒன்றிய ஆட்சி பிடிவாதமாக ஒரிசா மாநிலத்திற்கு அனுப்பும் முயற்சியில் வெற்றி பெற்றது இப்படி நீண்ட பட்டியல் இட முடியும்.

குடியரசு தலைவராக கே.ஆர்.நாராயணன் இருந்த காலத்தில் உச்சநீதிமன்றம் அவரது ஒப்புதலுக்காக அனுப்பிய நீதிபதிகள் பட்டியலில் பார்ப்பன உயர் ஜாதியினராகவே இருந்ததைப் பார்த்து அதிர்ச்சிஅடைந்தார், அதற்கு ஒப்புதல் தராமல் அதை திருப்பி அனுப்பி விட்டார். நீதிபதிகள் பதவிகளில் இட ஒதுக்கீடு இல்லை என்பது தமக்கு தெரியும் என்றாலும் பெண்கள் தலித் மற்றும் பழங்குடி பிரிவினருக்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உச்சநீதிமன்றம் என்ற ஒன்றே தேவையில்லை என்று பெரியார் 1971 சேலத்தில் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில் தீர்மானமே நிறைவேற்றினார். அதே உச்சநீதிமன்றம் - சமூகநீதி அடிப்படையில் விளிம்புநிலை பிரிவுக்கு உரிய பிரதிநிதித்துவம் தேவை என்பதை கொள்கையாக ஏற்றிருப்பது பாராட்டி வரவேற்கப்பட வேண்டியதாகும்.

ஆனாலும் தற்போதைய கொலிஜியத்தின் நிலை தொடருமா என்பதற்கு எந்த உறுதியும் இல்லை, நாளை மீண்டும் உச்ச நீதிமன்றம் சனாதனிகள் தலைமைக்கு வந்தால் நிலைமை தலைகீழாக மாறக்கூடும். எனவே தான் நீதிபதிகள் நியமனங்களில் சமூக நீதி சட்டமாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறோம். தமிழ்நாட்டில் இருந்து தமிழக முதல்வர் மட்டுமே இப்போது இதை வலியுறுத்தி வருகிறார், பெரியார் வலியுறுத்தி போராடிய கோரிக்கை இது, இந்த முழக்கத்துக்கு வலிமை சேர்க்கும் கடமை சமூக நீதி சக்திகளுக்கு உண்டு.

# மோடி ஏன் அஞ்சுகிறார்

*மணிப்பூரில் மே 3-ஆம் தேதி தொடங்கிய கலவரம் இப்போது 82 நாட்களாக தொடர்கிறது. தொடர்ந்து அங்கே வன்முறைகள் மிக மோசமான அளவில் நடந்து வருகிறது. மே நான்காம் தேதி இரண்டு பெண்களை கலவரக்காரர்கள் நிர்வாணமாக அழைத்து வந்து பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு உயிருடன் எரித்துக் கொல்லப்பட்ட செய்தி உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சம்பவம் நடந்த அடுத்த நாளே 27 பழங்குடிகள் மோசமாக பாதிக்கப்பட்டது இப்போது வெளியாகியிருக்கிறது. இதில் 7 பேர் கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர், 2 பேர் எரித்துக் கொல்லப்பட்டிருக்கிறார்கள், 5-பேர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக அடுத்தடுத்த அதிர்ச்சிகரமான செய்திகள் வந்தவண்ணம் உள்ளன.*

*சுதந்திர போராட்ட வீரரின் மனைவி 80 வயதுடைய, அவரை வீட்டிற்குள்ளேயே வைத்து உயிருடன் எரித்துக் கொன்றிருக்கிறார்கள் கலவரக்காரர்கள். அண்டை மாநிலமான மிசோராமிலும் இந்த கலவரம் பரவத் தொடங்கியிருக்கிறது. மெய்தீஸ் இன மக்கள் அங்கிருந்து வெளியேறுமாறு எச்சரிக்கை விடுமளவுக்கு வந்துவிட்டது.*

*பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், அவர் குக்கி இனத்தைச் சேர்ந்தவர், அவர் பிரதமர் மோடியை மிக கடுமையாக விமர்சித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். பாஜக எம்.எல்.ஏ-வான பவோலியன்லால் ஹொக்கிப் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் பிரதமர் மோடி மணிப்பூர் கலவரத்திற்கு முக்கியத்துவம் தராமல் அமெரிக்கப் பயணத்திற்கு முக்கியத்துவம் தந்தது தவறு, அவரது பயணத்திற்கு முன்பாக அவரை பலமுறை சந்திக்க முயற்சித்தோம், ஆனால் இப்போது வரையிலும் பிரதமர் மோடியை சந்தித்து முறையிட முடியவில்லை. ஒரு வாரம் தள்ளி போடுவதே மிகப்பெரிய தாமதம் என்றார்.*

*இந்த விவகாரத்தில் பிரதமர் மோடி பேச 79 நாட்கள் ஆகின. மெய்தீஸ் இன குழுக்கள் போலீஸ் கமாண்டோக்களுடன் இணைந்து இந்தத் தாக்குதலை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த வன்முறைக்கு 99% காரணம் மெய்தீஸ் இன மக்களும், கமாண்டோக்களும் இணைந்து கமாண்டோக்கள் கொடுக்கும் ஆயுதத்தை வைத்து நடத்தும் தாக்குதல் தான் என்று பாஜக சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.*

*பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இது குறித்து விவாதம் நடைப்பெற்றுள்ளது. ஆனால் இந்திய நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவில்லை. மோடி நேரில் வந்து இது குறித்து விளக்கம் தர வேண்டும் என்ற ஒற்றைக் கோரிக்கையை ஏற்க மறுத்து அடம் பிடிக்கிறார், மணிப்பூரே அழிந்தாலும் பரவாயில்லை என்ற முடிவுக்கு மோடி வந்துவிட்டார். பிரிட்டிஷ் நாடாளுமன்றம் விவாதிக்கிறது, ஆனால் இந்திய நாடாளுமன்றம் இது குறித்து விவாதிப்பதற்கு தயாராக இல்லை, இதுதான் மோடியின் உண்மையான சுயரூபம்.*

---

# 5 ஆண்டுகளில் விளம்பரத்திற்கு மட்டும் ரூ.2,700 கோடி செலவிட்ட மோடி அரசு!

புதுதில்லி, ஜூலை 22 - கடந்த 5 ஆண்டுகளில் ஒன்றிய பாஜக அரசு விளம்பரத்திற்காக மட்டும் ரூ.2 ஆயிரத்து 700 கோடி அளவிற்கான தொகையை செலவிட்ட நிலையில், இந்த தொகை, ஓராண்டில் 8 வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு இணையான ஒன்றாகும் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் நடைபெற்றுவரும்நிலையில்,எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு முக்கிய மான கேள்விகளை அரசிடம் எழுப்பியிருந்தனர். அதில், கடந்த 5 ஆண்டுகளில் ஒன்றிய அரசு விளம்பரங்களுக்காக செலவிட்ட தொகை எவ்வளவு? என்ற கேள்வியும் முன்வைக்கப் பட்டு இருந்தது. இதற்கு ஒன்றிய அரசு தற்போது பதில ளித்துள்ளது. அதில், கடந்த 5 ஆண்டுகளில் ஒன்றிய அரசின் விளம்பரச் செலவு ரூ. 2 ஆயி ரத்து 700 கோடி என தெரிவிக்கப்பட்டு உள்ளது. கடந்த 2014 - 2015 நிதியாண்டில் அச்சு ஊடகங்களுக்கு ரூ.424.84 கோடி, மின்னணு ஊடகங்களுக்கு ரூ. 473.67 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதேபோல, 2015 - 2016 நிதியாண்டில் அச்சு ஊடகங்களுக்கு ரூ. 508.22 கோடி, மின்னணு ஊடகங்களுக்கு ரூ. 531.60 கோடி, 2016 - 2017 நிதியாண்டில் அச்சு ஊடகங்களுக்கு ரூ.468.53 கோடி, மின்னணு ஊடகங்களுக்கு ரூ.609.15 கோடி, 2017 - 2018 நிதியாண்டில் அச்சு ஊடகங்களுக்கு ரூ.636.09 கோடி, மின்னணு ஊடகங்களுக்கு ரூ. 468.92 கோடி, 2018 - 2019 நிதியாண்டில் அச்சு ஊடகங்களுக்கு ரூ.429.55 கோடி, மின்னணு ஊடகங்களுக்கு ரூ.514.28 கோடி என செலவிடப்பட்டுள்ளது.

2019 - 2020 நிதியாண்டில் அச்சு ஊடகங்களுக்கு ரூ.295.05 கோடி, மின்னணு ஊடகங்களுக்கு ரூ.317.11 கோடி, 2020 - 2021 நிதியாண்டில் அச்சு ஊடகங்களுக்கு ரூ. 179.04 கோடி, மின்னணு ஊடகங்களுக்கு ரூ.101.24 கோடி என செலவிடப் பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் அச்சு மற்றும் மின் னணு ஊடகங்களுக்கு ஒட்டுமொத்தமாக ரூ. 2 ஆயிரத்து 700 கோடி செலவிடப்பட்டு உள்ளது. இந்நிலையில்தான், ஓராண்டில் 8 வட கிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் நிதிக்கு இணையான தொகையை, மோடி அரசு விளம்பரங்களுக்கு அள்ளி வீசியிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. கடந்த 2022 நிதியாண்டில் 8 வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு மொத்தமே ரூ.2 ஆயிரத்து 755 கோடியைத்தான் மோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அதாவது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் சராசரியாக ரூ.344.3 கோடி தான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில், ஒன்றிய பாஜக அரசு ஓராண்டு விளம்பரத்திற்கு செய்யும் தொகையை விட குறைவாகவே வடகிழக்கு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதாக சமூக செயற்பாட்டாளர்கள் குற்றச்சாட்டு எழுப்பியுள்ளனர்.

# கலைஞரின் பராசக்தி உருவாக்கிய புயல்

84. மாடர்ன் தியேட்டர் தயாரித்த மாயாவதி திரைப்படம் தோல்வியை தழுவியது, அதை சரி செய்ய கலைஞரின் மந்திரி குமாரி நாடகத்தை திரைப்படமாக்கி கலைஞர் வசனம் எழுத மாடர்ன் தியேட்டர் உரிமையாளர் டி.ஆர்.சுந்தரம் முடிவு செய்தார். பல தொடக்க விழாவுக்கு நல்ல நாள் தேதி குறிக்க ஒரு சோதிடரை கூட்டி வந்தார்கள். அவரிடம் கலைஞர் தோல்வி அடைந்த மாயாவதி படத்திற்கும் நீங்கள் தானே தொடக்க விழாவுக்கு நல்ல நாள் பார்த்தீர்கள் என்று கேட்க சோதிடர் தலை குனிந்து நின்றார்.

85. பராசக்தி படம் குறித்து பேராசிரியர் அன்பழகன் இவ்வாறு கூறினார், ‘இந்த படம் பார்த்ததும் நின்று விடும் அளவில் ஒரு கலைக்காட்சி அல்ல, பார்ப்போர் உள்ளத்தைத் தடவி அதில் படிந்துள்ள வஞ்சக சூழ்ச்சி கருத்துக்களைத் துடைத்து வெளியேற்றி அங்கு குடிகொள்ளும் அறசக்தி என்று குறிப்பிட்டார் ’

86. பராசக்தி படத்துக்கு போட்டியாக பக்தியை வளர்க்க எஸ்.எஸ்.வாசன் தயாரித்த படம் தான் அவ்வையார். அதில் பெரும் சம்பளம் கொடுத்து கே பி சுந்தராம்பாள் என்ற பிரபல பெண் பாடகரை நடிக்க வைத்தார்.

87. பராசக்தி வெற்றிப்படமாக ஓடிய போது அதை பொறுக்க முடியாது, தமிழன் என்ற புனைவுப் பெயரில் ஒருவர் ராஜகோபாலாச்சாரிக்கு 16 பக்க கடிதம் ஒன்றை எழுதினார்

88. 1975-இல் கலைஞர் ஒரு அவசர சட்டத்தை பிறப்பித்தார். அதன்படி பரம்பரையாக இருந்து வந்த கர்ணம் மற்றும் கிராமத் தலைவர் பதவிகள் ஒழிக்கப்பட்டன. அதற்கு பதிலாக தமிழ்நாடு மாநில தேர்வாணையத்தால் கிராம அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

89. இது குறித்து கலைஞர் கூறுகையில் பரம்பரை பதவிகளை ஒழித்தது தமிழ்நாட்டில் சாதியின் இயங்கியலை மாற்றியதோடு நிலப் பிரபத்துவம் என்ற சமூக விலங்கை கட்டுப்படுத்தியது என்றார்.

90. 1971-இல் கலைஞர் சிப்காட் என்ற என்று அழைக்கப்படும் அரசு தொழில் முன்னேற்றக் கழகத்தை உருவாக்கினார். தொழிற்பேட்டைகள் பரவுவதற்கும் நிலவள வங்கிகள் உருவாவதற்கும் சிப்காட் துணை நின்றது.

91. 1968-இல் திமுக ஆட்சிக்கு வந்த உடனேயே சோ துக்ளக் என்ற நையாண்டி நாடகத்தை எழுதி திமுகவை கடுமையாக விமர்சித்தார். அதற்கு பதிலளிக்கும் வகையில் ‘நானே அறிவாளி’ எந்த நாடகத்தை கலைஞர் எழுதினார். இந்த நாடகம் பற்றி கல்கி,ஆனந்த விகடன் கள்ள மவுனம் சாதித்து ஏதும் எழுதாமலேயே கடந்து சென்றன.

92. அவசரநிலை அறிவிக்கப்பட்ட காலத்தில் இந்திராவுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்த ஜெயபிரகாஷ் நாராயணனை அழைத்து அவரோடு மேடைகளை பகிர்ந்து கொண்டார் கலைஞர். ஒரு கூட்டத்தில் தமிழ்நாட்டில் லாட்டரி சீட்டுகளை ஒழிக்க வேண்டும் என்று ஜெயபிரகாஷ் நாராயணன் வேண்டுகோள் விடுக்க, அதே மேடையில் லாட்டரி சீட் ஒழிக்கப்படும் என்று அறிவித்தார் கலைஞர்.

93. வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது தான் கர்நாடகத்திற்கும் தமிழகத்திற்கும் காவிரி நீர் பங்கிடுவதிலுள்ள தகராறுகளைத் தீர்க்க காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் உருவாக ஓய்வின்றி உழைத்தவர் கலைஞர் என்று ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரியான குகன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

94. 1976-இல் சென்னை குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க வீராணம்



நீர்த்திட்டத்தை செக்கோஸ்லேவேகியா நாட்டுடன் இணைந்து தொடங்கினார் கலைஞர். இத்திட்டத்தில் ஊழல் நடந்துள்ளதாக கூறி சர்க்காரியா ஆணையத்தின் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வந்த எம்ஜிஆர் ஆட்சியில் பத்தாண்டு காலம் கிடப்பில் போடப்பட்டது இந்த திட்டம்.

கலைஞர் 100
1924 - 2023

ஆணையத்தின் விசாரணைக்கு வரும்போது இத்திட்டத்தில் ஊழல் ஒன்றுமில்லை என்று சர்க்காரியா ஆணையம் கூறியது. பிறகு சர்க்காரியா ஆணையம் சாட்சிகளின் விசாரணைக்கு பிறகு பிறகு 2000-2001 - இல் இத்திட்டத்தை புதிய வீராணம் என்று கொண்டு வந்தார் ஜெயலலிதா.

95 1976இல் நாட்டையும் அரசியல் அமைப்புகளையும் பாதுகாக்க எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து மகா கூட்டணி உருவாக்க மூளையாக செயல்பட்டவர் கலைஞர். டெல்லியில் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் இரா. செழியன் இல்லத்தில் அவர் வழியாக அனைத்துக்கட்சி தலைவர்களையும் கூட்டச் செய்து கலைஞரும் அந்த கூட்டத்தில் பங்கேற்றார்

96. 1983இல் காஞ்சி சங்கராச்சாரி ஜெயந்திரன் கலைஞரையும் அவரது மொழிக் கொள்கையையும் கடுமையாக சாடி இதயம் பேசுகிறது என்ற இதழில் எழுதினார். அதன் ஆசிரியராக இருந்தவர் பார்ப்பனர்களின் பிரதிநிதியாக செயல்பட்ட மணியன். இதற்கு கலைஞர் தமிழ் மொழியை ஆரிய மொழியான சமஸ்கிருதத்துடன் ஒப்பிடவே முடியாது என்று பதிலடி தந்தார்.

97. தேர்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் நீதிமன்றத்தின் முறையான ஆய்வுக்கு உட்பட்டவர்கள் என்ற சட்டம் முதன் முதலாக கலைஞர் ஆட்சியில் தான் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டம் எம்ஜிஆர் ஆட்சியில் சட்டத்துறை அமைச்சராக இருந்த முன்னாள் நீதிபதி நாராயணசாமியால் நீக்கப்பட்டது. திமுக சட்டசபையில் இதை கடுமையாக எதிர்த்தது.

98. தேர்தலில் தோல்வியடைந்த இந்திரா காந்தி, திமுகவுடன் கூட்டணி வைக்க முன்வந்தார். இந்தி திணிப்பில் தீவிரம் காட்டிய பிரதமர் மொரார்ஜி தேசாயை கடுமையாக எதிர்த்து திமுக மாநாடுகளை நடத்தியது. ஜனதா கட்சி தங்களுக்குள்ளே மோதிக்கொண்டு ஆட்சியை இழந்தது. பிளவுபட்ட ஜனதாக் கட்சியின் சார்பாக பிரதமராக மொரார்ஜி தேசாய் இருந்தபோது எம்ஜிஆர் மொரார்ஜிக்கு ஆதரவு தந்து தன் கட்சியைச் சார்ந்த இரண்டு பேரை மத்திய அமைச்சராக்கினார். சில நாட்களிலேயே மொரார்ஜி ஆட்சியும் கவிழ்ந்தது.

99. பெரியார் நூற்றாண்டு விழாவுக்கு இந்திராவை அழைத்துவந்து அவசர சட்டத்தை கொண்டு வந்ததற்காக பொதுக்கூட்ட மேடையிலேயே மன்னிப்பு கேட்க வைத்தவர் கலைஞர்.

100. அதிமுக மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அழுத்தத்தின் காரணமாகவே திமுகவுக்கு எதிராக சர்க்காரியா விசாரணையை ஆணையத்தை தாம் அமைக்க நேர்ந்தது என்று பகிரங்கமாக மேடையில் ஒப்புக்கொண்ட இந்திரா காந்தி, அந்த விசாரணை நாடகத்தை நகைச்சுவை படம் என்று கிண்டலடித்தார்.

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

ஆண்டு சந்தா : ரூ.300/–

5 ஆண்டு சந்தா : ரூ.1500/–

ஆசிரியர்
95. தோழமை இல்லம்.
வெங்கடேஸ்வரா நகர்.
பெருங்குடி. சென்னை – 96
தொடர்புக்கு : 8973341377

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மதுரையில் வைக்கம் போராட்ட நூற்றாண்டு கருத்தரங்கம்

மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஜூலை 1 அன்று மெஜஸ்டிக் ஹோட்டலில்

வைக்கம் போராட்ட நூற்றாண்டு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் யோகேஸ் வரவேற்புரையாற்றினார், மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி தலைமை தாங்கினார், சத்தியமூர்த்தி - முருகேசன் முன்னிலை வகித்தனர்.

சேரன் மாதேவி போராட்டம் குறித்து மாவட்ட கழக காப்பாளர் தளபதியும், திராவிடமும் சமூக நீதியும் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாணவரணித் தலைவர் ராஜிவ் காந்தியும், வைக்கம் போராட்டத்தின் தேவை நேற்றும் இன்றும் எனும் தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும் கருத்துரையாற்றினார்கள்.

அழகர் பிரபாகரன், வாசுகி, வேங்கைமாறன், விஜய், வீரலட்சுமி, கண்ணன், காமாட்சி உள்ளிட்ட கழகத் தோழர்களும், பல்வேறு தோழமை அமைப்பு தோழர்களும் மதுரை மாவட்ட திமுக நிர்வாகிகளும் இந்த கருத்தரங்கில் பங்கேற்றனர்.

## கழுவேத்தி மூர்க்கன் திரைப்பட ஆய்வு

மதுரை மாவட்டக் கழக சார்பில் சமத்துவ சமுதாயத்தை நோக்கிய கலைப் படைப்பான “கழுவேத்தி மூர்க்கன்” திரைப்படத்திற்கு பாராட்டு விழா, ஜூலை 21, மாலை 5 மணிக்கு மதுரை பிரசிடென்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேலூர் சத்யமூர்த்தி வரவேற்புரையாற்றினார், மாவட்ட செயலாளர்.மா.பா.மணி அமுதன் தலைமை தாங்கினார், மாவட்ட தலைவர் காமாட்சி பாண்டி முன்னிலை வகித்தார், மாவட்ட கழக காப்பாளர் தளபதி வாழ்த்துரை வழங்கினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். கழுவேத்தி மூர்க்கன் திரைப்பட இயக்குநர் சை.கௌதமராஜ் ஏற்புரையாற்றினார். வாசுகி நன்றி கூறினார்.

1–ஆம் பக்க தொடர்ச்சி

**ஈரோடு தெற்கு :** ஈரோடு தெற்கு மாவட்டக் கழக சார்பாக எது சனாதனம்? எது திராவிடம்? மூன்றாவது நாளாக தெருமுனைக் கூட்டம் ஜூலை 23, மாலை 6.30 மணியளவில் சித்தோடு பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இளைஞரணி தலைவர் பழனிச்சாமி, செயலாளர் பேரன்பு, விருதுநகர் செந்தில் ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி சிறப்புரையாற்றினார்.

இறுதியாக பெரியார், அம்பேத்கர், திராவிட மாடல், திராவிடர் விடுதலைக் கழகம் கடந்து வந்த பாதை, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய எது சனாதனம்? எது திராவிடம்? ஆகிய காணொளிகள் திரையிடப்பட்டன.
கூட்டத்தில் கிருஷ்ணன், திருமுருகன், இளவரசன், பாரதி, கணேஷ், அழகு, எழிலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சனாதனம் அன்றும் இன்றும்

- வேத கால சனாதனம் வேத பாடசாலை மட்டுமே நடத்தியது மோடி கால சனாதனம் மக்கள் பேசாத சமஸ்கிருதத்திற்கு மட்டுமே கூடுதல் நிதியை ஒதுக்குகிறது.
- வேத கால சனாதனம் கல்வி உரிமையைத் தடுத்தது, மோடி கால சனாதனம் சூத்திரர் உயர்கல்வியைத் தடுக்க நீட், நெக்ஸ்ட் தேர்வுகளை நடத்துகிறது.
- வேத கால சனாதனம் பெண்களை விதவையாக்கி - மொட்டை அடித்து இழிவுபடுத்தியது, மோடி கால சனாதனம் பழங்குடிப் பெண்களை நிர்வாணமாக்கி ஊர்வலம் போகும் வன்முறையாளர்களுக்கு ஜே போடுகிறது.
- வேத கால சனாதனம் கோயில் பூஜைகளில் பெண்களை தடுத்தது, மோடி கால சனாதனம் ஐயப்பன் கோவிலில் பெண்கள் நுழையவே தடுக்கிறது.
- வேத கால சனாதனம் கடல் பயணத்திற்கு தடைப் போட்டது, மோடி கால சனாதனம் கடல் தாண்டிப் போய் சனாதனத்தை பரப்புகிறது.
- வேத கால சனாதனம் அரசர்களை ராஜ குருவின் கட்டளைக்கு அடக்கி வைத்தது, மோடி கால சனாதனம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை ஆளுநரின் கட்டளைக்கு கீழ்படியச் சொல்கிறது.
- வேத கால சனாதனம் சூத்திர சம்பூகனின் தலையை வெட்டியது, மோடி கால சனாதனம் பசுமாட்டை காக்க மனிதர்களை கொலை செய்கிறது.
- வேத கால சனாதனம் ஜனநாயகத்தை மறுத்தது, மோடி கால சனாதனம் நாடாளுமன்றத்தின் முடக்குது.

# மணிப்பூர் மக்களுக்கு தமிழகம் துணை நிற்கும்



ஜூலை 18 அன்று சென்னையில் மணிப்பூர் மாணவர்கள் அங்கு நடக்கும் கலவரங்கள் குறித்து செய்தியாளர்களிடம் விளக்கி தமிழ்நாட்டில் உள்ள கட்சிகள் , இயக்கங்கள் மக்களின் ஆதரவைக் கேட்டனர். இந்த சந்திப்பில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்று மணிப்பூரில் மத வெறி மோதலை உருவாக்கும் நோக்கத்தோடு மாநில, ஒன்றிய பாஜக செய்யும் சதிகளை விளக்கினார். உலக நாடுகள், ஐநா மனித உரிமைகள் ஆணையம் மணிப்பூர் பிரச்சனையை கவலையுடன் அணுகும் போது பிரதமர் மோடி அதுகுறித்து வாய்திறக்காமல் இருப்பதை சுட்டிக்காட்டினார்.

மெய்தீஸ் பிரிவினருக்கு மாநில பாஜக ஆட்சியே கமாண்டோ போலீஸ் உதவியுடன் ஆயுதங்களைத் தந்து தாக்குதலை தூண்டிவிடுவதையும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் காங்கிரஸ் கட்சி ஒருங்கிணைப்பாளர் சசிகாந்த் செந்தில், பச்சை தமிழகம் சுப.உதயகுமார் ஆகியோரும் பங்கேற்றனர். கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர் உமாபதி, கரு.அண்ணாமலை, கழகத் தோழர்கள் அஜித்,விஷ்ணு ஆகியோர் பங்கேற்றனர்.

## மணிப்பூர் கலவரம்; பாஜக ஆட்சியைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

சேலம் : ஜூலை 23- ஆம் தேதியன்று கொளத்தூர் பேருந்து நிலையத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்ப் புலிகள் கட்சி ஆகிய கட்சிகள் இணைந்து மணிப்பூர் மாநிலத்தில் நடைபெற்று வரும் வன்முறைகளை தடுக்கத் தவறிய ஆளும் பாஜக மற்றும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தி.மு.க தலைமைக்கழக பேச்சாளர் பன்னீர்செல்வம், கழக தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈசுவரன், சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் கு.சூரியகுமார், கொளத்தூர் நகரத் தலைவர் சி.இராமமூர்த்தி, கொளத்தூர் வி.சி.க மாணவரணி ஜீவா, வி.சி.க. கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் சேட்டுகுமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.வி.சி.க. நகர து.செயலாளர் பழனி நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : July 28, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran